**“சில்பாலோக்க வேலைத்திட்டம்”**

கல்விப் பொது தராதரப்பத்திர (உ/த)
பரீட்சைப் பெறுபேற்றை அதிகரித்தல் - 2021

# புவியியல்

## மானிடப் புவியியல்







**சுயகற்றலுக்கான கையேடு**

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி

# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டின் வெற்றியானது தொடர்ச்சியானதாக காணப்படவேண்டுமாயின், அவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதன் மூலமே சாத்தியமாக அமையும். மாணவர்களின் அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின் சுயகற்றலில் ஈடுபடுவது அத்தியாவசியமாகும். தம் கற்றல் செயற்பாட்டை முகாமை செய்யும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு, தனிப்பட்ட உந்துதல் அவசியமாவதுடன் இந்த நவீன உலகின் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமும் அதுவே ஆகும்.

கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிலிருந்து உலக மக்களது செயற்பாடுகள் பல்வேறு சவால்களுக்கு உள்ளாகியுள்ளன. எனவே, அனைத்து மானிட செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளோம். அந்தவகையில், மாணவர்களது கற்றல் செயற்பாட்டையும் நவீன மயப்படுத்தி மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில், மத்திய மாகாணத்தின் க.பொ.த (உ/த) மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நவீனமயப்படுத்தி, ஓர் உயர்ந்த அடைவு மட்டத்திற்கு மாணவர்களை இட்டு செல்வதற்காக இந்த கையேட்டுத் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உங்கள் கல்வி செயற்பாட்டை வடிவமைத்துக் கொள்வதுடன், இச்செயற்பாட்டிற்கு பிள்ளைகளுக்கு துணைப்புரிவதற்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்விக் காரியாலயம், கோட்டக்கல்விக் காரியாலயம் மற்றும் பாடசாலை சமூகம் போன்றோர் எந்த நேரத்திலும் தயார் நிலையிலுள்ளார்கள் என்பதை உங்களுக்கு மிக மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் உங்களது சுயகற்றல் செயற்பாட்டிற்காக ஆசிரியர் குழாம், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இது ஒரு முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு என்பதை அறிந்துள்ளதுடன் அதற்காக எந்த நேரத்திலும் உதவுவதற்கு தயாராக உள்ளனர் என்பதையும் அறியத்தருகின்றேன். மேலும் 2021 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) மாணவர்களுக்காக இக்கற்றல் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வரும் உங்களது சகோதர சகோதரிகளும் பயன்படுத்தி பயன்பெற முடியும்.

இந்த கற்றல் தொகுதியானது, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பயன்படுத்தும் போது உங்களது உயர்கல்விக்கு உறுதுணையாக அமையும் என கருதுகின்றேன். மத்திய மாகாணத்தின் அடைவு மட்டத்தை உயர்த்தும் முன்னுரிமை வேலைத்திட்டமான ‘‘சில்பாலோக்க’’ வேலைத்திட்டத்தின் கீழ் இச் செயற்றிட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக நிதியுதவி வழங்கியதுடன் ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கிய மத்திய மாகாணத்தின் பிரதான செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த கற்றல் தொகுதியை வடிவமைப்பதற்கு பல்வேறு வகைகளிலும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்களது எதிர்காலத்தின் கனவு நனவாக எனது நல்லாசிகள்

E.P.T.K. ஏக்கநாயக்க,
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

# மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் Covid 19 இன் பரவல் ஆரம்பித்த உடன் பிள்ளைகளை இப்பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் முகமாக 2020 March 12ம் திகதியளவில் மூடப்பட்ட பாடசாலைகள் இன்று வரை தமது வழமையான செயற்பாடுகளுக்கு திரும்ப முடியாத நிலையிலேயே உள்ளன.

இந்நிலையை ஓரளவேனும் ஈடுசெய்யும் முகமாக மத்திய மாகாணக் கல்வி திணைக்களமானது இணையம், தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற டிஜிட்டல் தளங்களுடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி செய்து வருகிறது. எனினும் இந்த டிஜிட்டல் வளங்களை அணுகும் சந்தர்ப்பங்கள் அனைத்து மாணவர்களுக்கும் சீராக அல்லது ஒரே மாதிரியாக அமையாமலிருப்பது எமக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது.

எனவே, 2021ல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி இக்கற்றல் துணையேடு சகல பாடங்களுக்குமாக தயாரிக்கப்பட்டு மென் பிரதிகளாக பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படுகிறது. ஆர்வம், விடாமுயற்சி, இலக்கு நோக்கிய பயணம் என்பன நமது சமூக எழுச்சிக்கான அடிப்படையான கல்வி சார் நடவடிக்கைகளாக கருதி இன்று நாம் எதிர் கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்க தயாராக வேண்டும்.

எனவே, எமது இந்த முயற்சியானது பரீட்சைக்கு உங்களை தயார் செய்து கொள்வதிலும் வெற்றிபெற செய்வதிலும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தவறவிடப்பட்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை சுயகற்றலின் வாயிலாக அடையும் வகையில் இக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவச் செல்வங்கள் இக் கையேட்டினை முறையாக பயன்படுத்தி பரீட்சையில் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இவற்றை தயாரித்து வடிவமைத்து தந்து உதவிய ஆசிரியர்கள், வளவாளர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. ஆர். சத்தியேந்திரா,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

***E.P.T.K ஏக்கநாயக்க***
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***A.R சத்தியேந்திரா***
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

**A.L.M.சாருடீன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

### *வழிகாட்டல்*

***P. விக்னேஸ்வரன்***
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

### *நூலாக்கக் குழு*

***M. உலகநாதன்***
பிரதி அதிபர், ஆசிரியர்
இராகலை உயர்நிலை பாடசாலை
வலப்பனை கல்வி வலயம்

***R. தேவேந்திரன்***
ஆசிரியர்
மமா/வ. அருணோதயா இந்து கல்லூரி
வலப்பனை கல்வி வலயம்

## பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி | I |
| மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி | II |
| கண்காணிப்பும் மேற்பார்வையும் | III |
| புறவய வினா தொகுப்பு | 01 |
| மானிட புவியியலின் விடயப்பரப்பு | 42 |
| குடித்தொகை | 44 |
| குடிப்பெயர்வு | 47 |
| குடியிருப்பு | 48 |
| நகரமயமாதல் | 51 |
| விவசாய தொழிநுட்பம் | 53 |
| உற்பத்தி விரிவாக்கம் | 55 |
| சந்தைப்படுத்தல் | 56 |
| அகழ்வு கைத்தொழில் | 57 |
| உற்பத்தி கைத்தொழில் | 59 |
| சுற்றுலா கைத்தொழில் | 62 |
| பூகோளமயமாதல் | 64 |
| பல்தேசிய கம்பனி | 65 |
| பிராந்திய அமைப்பு | 66 |
| புறவய வினா தொகுப்பு – விடைகள் | 69 |
| உசாத்துணைகள் | 71 |

## புறவய வினா தொகுப்பு

1. மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் இடையிலான தொடர்புகள் தொடர்பாக கற்கை நெறிகளை முன்வைத்தவர்கள்,
    1. கால் ரிக்டர், ஹோன் கம்போல்ட், ரிட்சட் ஹாட்சோன்
    2. அல்பிரட் வெக்னர், கால் ரிக்டர், டி கண்டோல்
    3. விலாடிமின் கெப்பன், ஹோன் கம்போல்ட், டி.பி.கிரிக்
    4. எடம்ஸ், வாடியா, குலரத்தினம்

(……)

2. புவிமேற்பரப்பின் கற்கை ரீதியான பல்வகைமையை முன்வைத்த புவியியலாளர்,
    1. வோன் தூனன்
    2. ரிச்சட் ஹாட்சோன்
    3. ரிச்சட் ஹெட்லி
    4. விளாடிலாப்லாஸ்

(……)

3. சூழலின் விசேட உயிரினங்களில் முக்கியமானதாக அமைவது,
    1. தாவர கூட்டம்
    2. கடல்வாழ் உயிரினம்
    3. மனித இனம்
    4. பறவை இனம்

(……)

4. மனிதன் மற்றும் சூழலுக்கு இடையிலான தொடர்பை பற்றி கற்றல், புவி மேற்பரப்பின் பல்வகைமையை கற்றல் எனும் இரு கருத்துக்கள் சார்ந்த இரு அறிஞர்கள்,
    1. கார் ரிக்டர், ரிச்சட் ஹாட்சோன்
    2. லோன் ஹம்போல்ட், ரட்சல்
    3. அலெக்சாண்டர், விலாடி லாப்லாஸ்
    4. ஹெனெக்சி மெண்டர், கிரிபத் டெய்லர்

(……)

5. மானிட நிலத்தோற்றத்தில் பிரதானமாக அமையும் தொகுதி,
    1. தரையுயரம், நிலம், காட்டு வளம், கனிய வளம்
    2. குடியிருப்பு, நகராக்கம், கைத்தொழில், போக்குவரத்து
    3. போக்குவரத்து, சமவெளி, கைத்தொழில், நகராக்கம்
    4. குடியிருப்பு, கரையோரம், கிராமம், உட்கட்டமைப்பு

(..........)

6. இலங்கையின் மானிட நிலத்தோற்றத்தில் புவி மேற்பரப்பு செல்வாக்கு செலுத்துவதற்கான உதாரணங்கள்,
    1. மலைநாட்டில் நதிகள் பள்ளத்தாக்குகள் காணப்படல்.
    2. மலை நாட்டில் இயற்கை தாவரங்கள் இருத்தல்.
    3. மலைநாட்டில் தோட்ட மறக்கரி பயிர்ச்செய்கை

4. மலை நாட்டில் உயர வேறுபாட்டால் வெப்பம் குறைந்து செல்லல். (..........)

7. பௌதீக வளங்களின் பயன்பாடு துரிதமாக அதிகரித்தமைக்கான பிரதான காரணியாக அமையக்கூடியதும், அதனால் எவ்வாறான வளங்கள் மீது பயன்பாடு அதிகரித்து செல்லும் என்பது தொடர்பான சரியான கூற்று,
   1. மனித தேவைகள் அதிகரிப்பும், அதனால் இரண்டாம் நிலை பொருளாதாரத்தின் மீதான தாக்கம் அதிகரித்தல்.
   2. மனித தேவைகள் அதிகரிப்பும், அதனால் காடு, கடல், உயிரினம் ஆகியன மீதான தாக்கம் அதிகரித்தல்.
   3. மனித தேவைகள் அதிகரிப்பும், அதனால் முதல் நிலை பொருளாதார நடவடிக்கைகள் மீதான தாக்கம் அதிகரித்தல்.
   4. மனித தேவைகள் அதிகரிப்பும், அதனால் நிலம், நீர், மண், கனிய வளம் ஆகியன மீதான தாக்கம் அதிகரித்தல்.

(..........)

8. உலகமயமாக்கல் செயல்முறை ஊடாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான செயற்பாடுகளாக அமைவது,
   1. வர்த்தகமும் பரிமாற்றமும், மூலதனமும் முதலீடும், இடப்பெயர்வும் அறிவுப் பகிர்வும்
   2. கடன் வழங்குதலும் மூலதனமும், மூலதனமும் முதலீடும், இடப்பெயர்வும் வள சுரண்டலும்
   3. வர்த்தகமும் வள சுரண்டலும், மூலதனமும் முதலீடும், தொழிநுட்ப பரிமாற்றமும் அறிவுப் பகிர்வும்
   4. கடன் வழங்குதலும் மூலதனமும், தொழிநுட்ப பரிமாற்றமும் நன்கொடை வழங்குதலும், வள சுரண்டலும் வள பங்கீடும்

(..........)

9. உலகின் பிரதான பல்தேசிய கம்பனிகளும், நாடுகளின் அமைவும் சரியாக அமைவது,
   1. மொன்சண்டோ – USA, மிட்சுபி – UK, யுனிலிவர் - ஜப்பான், ரொக்பெலர் - USA
   2. மொன்சண்டோ – USA, மிட்சுபி – ஜப்பான், யுனிலிவர் - UK, ரொக்பெலர் - USA
   3. மொன்சண்டோ – USA, மிட்சுபி – ஜப்பான், யுனிலிவர் - USA , ரொக்பெலர் - UK
   4. மொன்சண்டோ – USA, மிட்சுபி – USA, யுனிலிவர் - UK, ரொக்பெலர் - ஜப்பான்

(..........)

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

10. பூகோளமயமாக்கலின் துரித செயற்பாட்டுக்கு பங்களிப்பு செய்யும் பிரதான காரணிகள்,
    1. தகவல் தொடர்பாடல் துறையும், போக்குவரத்து துறையும் வர்த்தகமும்
    2. கணிணி தொழிநுட்பமும், உட்கட்டமைப்பு துறையும்
    3. தகவல் தொடர்பாடல் துறையும், உட்கட்டமைப்பு துறையும்
    4. E - வங்கிச் சேவை, E - வர்த்தகம், ஏனைய பல்கலைக்கழகம், E – மருத்துவம்

(..........)

11. குறுகிய நேரத்தில் எந்தவொரு நிகழ்வையும் செய்தியையும் அறிந்து கொள்ளக்கூடிய பிரதான செய்தி தொழிநுட்பத்தின் கூறுகளாக அமையக்கூடியது (பிரிவுகள்),
    1. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், மின்னஞ்சல் வசதியமைப்பு, செல்லிட தொலைபேசிகளின் பயன்பாடு
    2. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், கம்பியில்லா வலையமைப்பு, செல்லிட தொலைபேசிகளின் பயன்பாடு
    3. கண்ணாடியிழையக்கம்பிகள், கம்பியில்லா வலையமைப்பு, இணையத்தள பயன்பாடு
    4. கண்ணாடியிழையக்கம்பிகள், கம்பியில்லா வலையமைப்பு, செல்லிட தொலைபேசிகளின் பயன்பாடு

(..........)

12. "மெஸ்ட்ரிச்" உடன்படிக்கையின்படி, அறியப்பட்டு தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு மற்றும் ஆண்டு,
    1. ஐரோப்பிய ஒன்றியம் - 1993
    2. ஆசியான் அமைப்பு - 1967
    3. சார்க் அமைப்பு – 1985
    4. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் - 1945

(..........)

13. சார்க் அமைப்பு நாடுகளில் வர்த்தக பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதற்காக பிரதானமாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளாவன,
    1. வட அமெரிக்க முன்னுரிமை தேர்வு வர்த்தக உடன்படிக்கை (NAFTA)
    2. தெற்காசிய முன்னுரிமை தேர்வு வர்த்தக உடன்படிக்கை (SAPTA), தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
    3. வங்காள விரிகுடா நாடுகளின் பிம்ஸ்டெக் (BIMSTEC)
    4. வளர்ந்து வரும் தேசிய பொருளாதாரங்களின் சங்கம் (BRICS)

(..........)

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

14. தெற்காசிய ஒத்துழைப்பு அமைப்புகளின் ஆரம்ப அங்கத்து நாடுகளின் தொகுதி
    1. பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி, லக்சம்பேர்க், நெதர்லாந்து,ஜெர்மனி
    2. இந்தோனேசியா, மலேசியா. பிலிப்பைன்ஸ், சிங்கபூர், தாய்லாந்து
    3. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைத்தீவு, பூட்டான்
    4. பிரேசில், ரஸ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா

(..........)

15. பிராந்திய அமைப்புகள் எதிர்கொள்ளும் பிரதான சவால்களாக அமைவது,
    1. வேலையின்மை, பயங்கரவாதம், சர்வதேச இடப்பெயர்வு, பொருளாதார வளர்ச்சி
    2. வேலைவாய்ப்பு, பயங்கரவாதம், வர்த்தக இணக்கம், பொருளாதார வீழ்ச்சி
    3. வேலையின்மை, தொற்றுநோய்கள், வர்த்தக பிணக்கு, பொருளாதார மந்தம்
    4. வேலையின்மை, பயங்கரவாதம், வர்த்தக பிணக்கு, பொருளாதார வீழ்ச்சி

(..........)

16. 1983 ஆம் ஆண்டு “டில்லி பிரகடனம்” மூலமாக இணக்கம் காணப்பட்ட பிரதான துறைகள்
    1. விவசாயம், போக்குவரத்து, தபால் சேவை, விஞ்ஞானம், காலநிலை, விளையாட்டு. சுகாதாரம், கிராமிய அபிவிருத்தி
    2. சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் கல்வி, சிறுவர் உரிமை, சிறுவர் போசாக்கு
    3. பயங்கரவாத ஒழிப்பு, போதைப்பொருள் ஒழிப்பு, விஞ்ஞானகூட உதவி, அகதிகள் புனர்வாழ்வு
    4. சிறுவர் பாதுகாப்பு, தபால் சேவை, விளையாட்டு, சுகாதாரம், நகர அபிவிருத்தி

(..........)

17. அனர்த்த முகாமைத்துவ சபையின் கட்டமைப்பின் பிரதான அம்சங்களாக அமைவது.
    1. ஜனாதிபதி, பிரதமர், எதிர்கட்சி தலைவர், முதலமைச்சர்கள், எதிர் கட்சி உறுப்பினர்கள்
    2. ஜனாதிபதி, நிதி அமைச்சர். எதிர்கட்சி தலைவர், முதலமைச்சர்கள், எதிர் கட்சி உறுப்பினர்கள்
    3. ஜனாதிபதி, பிரதமர், எதிர்கட்சி தலைவர், ஆளுநர்கள், எதிர் கட்சி உறுப்பினர்கள்
    4. ஜனாதிபதி, பிரதமர், எதிர்கட்சி தலைவர், முதலமைச்சர்கள், சகல கட்சி உறுப்பினர்கள்

(..........)

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

18. ஓர் இனம், சமூகம் மற்றும் தனிநபர் முதல் கொடுக்கப்பட்ட மானிட பௌதீக பொருளாதார இழப்புக்களை தடுத்தலும், இழிவளவாக்குதலும் எனும் பிரதான பணியை செய்யும் நிறுவனம்,
    1. பிரதேச செயலகம் (D.S)
    2. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் (DMC)
    3. தேசிய நீர்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகவரகம் (NARA)
    4. புவிச்சரிதவியல் சுரங்க அகழ்வு திணைக்களம் (GSMD)

(..........)

19. அனர்த்த முகாமைத்துவ உபாய செயன்முறையின் சரியான ஒழுங்கமைப்பு,
    1. முன்னாயத்தம், இழிவளவாக்குதல், வழமைக்கு திரும்புதல், துலங்குதல்.
    2. முன்னாயத்தம், வழமைக்கு திரும்புதல், துலங்குதல், இழிவளவாக்குதல்.
    3. முன்னாயத்தம், துலங்குதல். வழமைக்கு திரும்புதல், இழிவளவாக்குதல்.
    4. முன்னாயத்தம், துலங்குதல், வழமைக்கு திரும்புதல், அனர்த்தம்.

(..........)

20. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதற்கு உத்தேசித்து, தேர்தல் மூலம் தனது நாட்டு மக்களின் விருப்பத்தை பெறுவதற்கு முயற்சி செய்யும் நாடு,
    1. லக்ஸ்ம்பேர்க்
    2. இத்தாலி
    3. பிரான்ஸ்
    4. பிரித்தானியா

(..........)

21. உயிரினத் தொகுதியில் ஒழுங்கமைக்கப்பட் ஏறுவரிசை படிமுறை வளர்ச்சி நிலையின் சரியான விடை,
    1. தனியன், அங்கி, சாகியம், இனம், குடி, சமுதாயம், சூழல் தொகுதி.
    2. சூழல் தொகுதி, இனம், குடி, சாகியம், சமுதாயம், தனியன் அங்கி.
    3. தனியன், அங்கி, இனம், குடி, சாகியம், சமுதாயம், சூழல் தொகுதி.
    4. தனியன், அங்கி, இனம், குடி, சமுதாயம், சாகியம், சூழல் தொகுதி.

(..........)

22. பின்வரும் விடைகளுள் எது, இரண்டாம் நிலைப் பொருளாதார நடவடிக்கையை எடுத்துக் காட்டுகின்றது?
    1. வர்த்தக வங்கியில் தொழில் புரிதல்.
    2. பேரூந்து செலுத்துனராகத் தொழில் புரிதல்.
    3. இரும்பு மற்றும் உருக்குக் கைத்தொழிலொன்றில் தொழில் புரிதல்.
    4. விவசாயியாகத் தொழில் புரிதல்.
    5. மீனவராகத் தொழில் புரிதல்.

(..........)

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

23. பின்வரும் தெரிவுகளில் எது, இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களின் மூன்று அமைவிடங்களைச் சரியாகக் காட்டுகின்றது?
   1. கட்டுநாயக்கா, அவிசாவளை மற்றும் பியகம
   2. பியகம, கட்டுநாயக்கா மற்றும் ஹொரணை
   3. யக்கல, அவிசாவளை மற்றும் ஹொரணை
   4. அவிசாவளை, பியகம மற்றும் ஹொரணை
   5. கட்டுநாயக்கா, கொக்கல மற்றும் பியகம

(..........)

24. பின்வரும் விடைகளுள் எது, “ஆசியான்” (ASEAN) அமைப்பைச் சார்ந்த மூன்று அங்கத்துவ நாடுகளின் பெயர்களைக் கொண்டிருக்கின்றது?
   1. பங்களாதேஷ், நேபாளம், வியட்னாம்
   2. மியன்மார், சிங்கப்பூர், கம்போடியா
   3. இந்தோனேசியா, சீனா, லாவோ
   4. தாய்லாந்து, பாகிஸ்தான், புறூணை
   5. சீனா, மலேசியா, கம்போடியா

(..........)

25. உலகில் இன்று மிக அதிகளவில் நகரமயமாக்கப்பட்ட இரு நாடுகள் எவை?
   1. சீனா மற்றும் இந்தியா
   2. ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர்
   3. ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம்
   4. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் கட்டார்
   5. குவைத் மற்றும் சிங்கப்பூர்

(..........)

26. குடியகழ்வு என்பது நபர் ஒருவர்,
   1. தனது நாட்டிலிருந்து வெளியேறுவது.
   2. தனது வாழிடத்தினை நாட்டின் இன்னொரு பகுதிக்கு மாற்றுவது.
   3. ஒரே நகரத்தில் இன்னொரு அமைவிடத்திற்குச் செல்வது.
   4. பிறிதொரு மாவட்டத்திற்குச் செல்வது
   5. தமது சொந்த நாட்டில் பிறிதொரு நகரத்திற்குச் செல்வது

(..........)

27. பின்வரும் விடைகளுள் எது, குடியிருப்பு தோற்றப்பாட்டு முறைமையொன்றின் நதிக்கரை குடியிருப்பினை சரியாக காட்டும் விடை அல்லாதது?
   1. ஊர்
   2. எரிது
   3. மொஹஞ்சதாரோ
   4. ஹரப்பா
   5. நொசேஸ்

(..........)

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

28. பின்வரும் விடைகளுள் எது, இலங்கையின் கிராம நகரத்திற்கான உதாரணமாகக் காட்டுவதற்கு பொருத்தமற்றதாக காட்டுகின்றது?
    1. ஹோமாகம
    2. பெனிதெனிய
    3. நிட்டம்புவ
    4. மீரிகம
    5. மாலபே

(..........)

29. 'யுனெஸ்கோ' வினால் பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கையிலுள்ள உலக மரபுரிமை மையங்கள் இரண்டினைக் காட்டும் சரியான விடை எது?
    1. மத்திய குன்றுகள் மற்றும் யால புகலிடம்
    2. மின்னேரியா - கௌடுல்ல மற்றும் வில்பத்து புகலிடம்
    3. சிங்கராஜா காடு மற்றும் மத்திய உயர் நிலங்கள்
    4. வில்பத்து புகலிடம் மற்றும் மகாவலி ஆற்றுப்பள்ளத்தாக்கு
    5. வஸ்கமுவ புகலிடம் மற்றும் சிங்கராஜா காடு

(..........)

30. சூழல் நிகழ்ச்சித்திட்டத்திற்கான தென்னாசியாவின் கூட்டமைப்பினால் (SACEP) அவற்றின் செயன்முறைப் பகுதிகளாக 15 பகுதிகள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றில், சட்டமியற்றல், கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றுக்கான பொறுப்பைக் கொண்டிருக்கும் நாடு எது?
    1. இலங்கை
    2. பாகிஸ்தான்
    3. இந்தியா
    4. பங்களாதேஷ்
    5. நேபாளம்

(..........)

31. சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்தை தன்னகத்தே கொண்டுள்ள நாடு எது?
    1. தாய்வான்
    2. பங்களாதேஷ்
    3. வியட்னாம்
    4. பிலிப்பைன்ஸ்
    5. இந்தியா

(..........)

32. சிசு மரண வீதம் என்பது,
    1. வருடாந்தம் தலா 1000 மக்களுக்கு, ஒரு வருட வயதுப் பிரிவுக்குக் கீழ் இடம்பெறும் இறப்பு
    2. வருடாந்தம் தலா 1000 மக்களுக்கு, 5 வருட வயதுப் பிரிவுக்குக் கீழ் இடம்பெறும் இறப்பு
    3. வருடாந்தம் தலா 1000 உயிரப் பிறப்புக்களுக்கு ஒரு வருட வயதுப் பிரிவுக்குக் கீழ் இடம்பெறும் இறப்பு
    4. வருடாந்தம் தலா 1000 மக்களுக்கு 2 வருட வயதுப் பிரிவுக்குக் கீழ் இடம்பெறும் இறப்பு
    5. வருடந்தம் தலா 100 மக்களுக்கு ஒரு வருட வயதுப் பிரிவுக்குக் கீழ் இடம்பெறும் இறப்பு

(..........)

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

33. பின்வரும் விடைகளுள் எது, இலங்கையின் விசேட பொருளாதார மையங்களின் மூன்று அமைவிடங்களைச் சரியாகப் பெயரிடுகின்றது?
    1. தம்புள்ளை, தம்புத்தேகம, வெலிசறை
    2. நாரகேன்பிட்டிய, வெள்ளவாய, வெலிசறை
    3. தம்புள்ளை, சியாம்பலாந்துவ, நாரஹேன்பிட்டிய
    4. கெப்பிட்டிப்பொல, வெள்ளவாயா, சியாம்பலாந்துவ
    5. தம்புள்ளை, தம்புத்தேகம, வெள்ளவாயா

(..........)

34. 'ப்ளு பனானா' (Blue Banana) எனப்படும் கைத்தொழில் மயமாக்கப்பட்ட, மிகவும் அடர்த்தியான நகராக்க வலயமானது தொடர்ச்சியாக எங்கிருந்து விரிவடைந்து செல்கின்றது?
    1. மத்திய தரைக் கரையோர வலயத்தில் ஜெனோவாவில் இருந்து வெலன்சியா வரை
    2. மத்திய ஐரோப்பாவிலிருந்து மொஸ்கோ வரை
    3. வடமேற்கு இங்கிலாந்திலிருந்து வடக்கு இத்தாலி வரை
    4. மத்திய ஐரோப்பிய நகராக்க வலயம்
    5. பாரிசிலிருந்து ரூர் வரை

(..........)

35. மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் தம்புத்தேகம மற்றும் தெஹியத்தக்கண்டிய நகரக் குடியிருப்புக்கள் முறையே பின்வரும் எத்தொகுதிகளில் அமைந்துள்ளன?
    1. H மற்றும் C
    2. H மற்றும் B
    3. C மற்றும் L
    4. H மற்றும் L
    5. C மற்றும் G

(..........)

36. பின்வரும் விடைகளுள் எது, பல்தேசியக் கூட்டுத்தாபனங்களின் விரிவாக்கத்தினை ஊக்குவிக்கும் மூன்று காரணிகளைச் சரியாகக் காட்டுகின்றது?
    1. முதல் மூலதனம், உழைப்பு, போக்குவரத்து
    2. தொழிநுட்பப் பரிமாற்றம், முதல் மூலதனம், மூலப்பொருட்களைப் பிரித்தெடுத்தல்
    3. முதல் மூலதனம், போக்குவரத்து, தொழில்நுட்பப் பரிமாற்றம்
    4. போக்குவரத்து, உழைப்பு, முகாமைத்துவம்
    5. தொழில்நுட்பப் பரிமாற்றம், முதல் மூலதனம், உள்ளூர் முகாமைத்துவம்

(..........)

37. மூலப்பொருட்கள் ஒன்று அல்லது பல மூலப்பொருட்கள் சேர்வதனால் உருவாகுவதே ''கனியம்'' ஆகும். அதன்படி, இலங்கையின் மூன்று வகை கனியங்கள் முறையே,
    1. எரிபொருள் கனியம், உலோக கனியம், அல்லுலோக கனியம்
    2. சக்திவள கனியம், உலோக கனியம், எரிபொருள்கனியம்
    3. லிமோனைட், மெக்னடைட், கதிரியக்க கனியம்

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

4. எரிபொருள் கனியம், உலோக கனியம், லிமோனைட்

(……..)

38. லிமோனைற்று, மெக்னெடைட் எனும் கனியங்கள் இலங்கையில் பரம்பி காணப்படும் இடங்கள் முறையே
1. இரத்தினபுரி, காலி, விலகெதர, சேருவில
2. எப்பாவெல, போகல, புல்மோட்டை, விலகெதர
3. சேருவில, புதுவைக்கட்டு. நிலாவெளி, குதிரை மலை
4. முத்துராஜ வெல, தியத்தலாவ, பண்டாரவளை

(……..)

39. கயோலின் பந்துக்களி, ஓட்டுக்களி என்பன முறையே அமைந்துள்ள பிரதேசங்கள்
1. பொரகஸ்கமுவ, மீட்டியாகொட, வஸ்கமுவ
2. மாத்தளை, மாத்தறை, மொனராகலை, இரத்தினபுரி
3. தும்பரை, கொலன்கஹா, போகல
4. ஆண்டிகம, தப்போவை, பல்லம

(……..)

40. தும்பரை, கொலன்கஹா, போகல ஆகிய பகுதிகளில் பிரதானமாக காணப்படும் கனிய வளங்கள்
1. காரியம்
2. இரத்தினக்கல்
3. பந்துக்களி
4. லிமோடைட்

(……..)

41. குடித்தொகையின் வளர்ச்சி கால கட்டங்களின் அடிப்படையில் பொருத்தமான வளர்ச்சி காலங்கள்,
1. மிக நீண்ட காலத்தில் மந்தமான வளர்ச்சி, குறுகிய காலத்தில் விரைவான வளர்ச்சி
2. மிக நீண்ட காலத்தில் விரைவான வளர்ச்சி, நீண்ட காலத்தில் விரைவான வளர்ச்சி
3. மிக நீண்ட காலத்தில் மந்தமான வளர்ச்சி, குறுகிய காலத்தில் மந்தமான வளர்ச்சி
4. மிக நீண்ட காலத்தில் மந்தமான வளர்ச்சி, மிக நீண்ட காலத்தின் விரைவான வளர்ச்சி

(……..)

42. சனத்தொகையின் பரம்பல் மட்டங்கள் அடிப்படையில் அமைவது,
1. பூகோள பரம்பல், கண்ட பரம்பல், நாடுகளுக்கு ஏற்ப பரம்பல்
2. தரைதோற்றம், காலநிலை, உட்கட்டமைப்பு, குடிப்பெயர்வு
3. பிறப்பு. இறப்பு, அடர்த்தி, வளர்ச்சி, பருமன்
4. வயது கட்டமைப்பு, கருவளம், ஆயுட்காலம், பருமன்

(……..)

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

43. குடித்தொகை பரம்பல் அடிப்படையில் இறங்குவரிசையாக அமைவது,
1. ஆசியா 60%, ஆபிரிக்கா 15%, ஐரோப்பா 11% தென் அமெரிக்கா 6%
2. ஆசியா 60%, ஆபிரிக்கா 15%, தென் அமெரிக்கா 11%, ஐரோப்பா 6%
3. ஆசியா 60%, ஐரோப்பா 15%, ஆபிரிக்கா 11%, தென் அமெரிக்கா 6%
4. ஆசியா 60%, தென் அமெரிக்கா 15%, ஐரோப்பா 11%, ஆபிரிக்கா 6%

(……..)

44. பிறப்பு வீதம் அதிகம், ஆயுட் காலம் குறைவு, வளரும் நாடுகளுக்கு பொருத்தமான வயது கூம்பு கட்டம்
1. ஆரம்ப கட்டம்
2. விரிவடையும் கட்டம்
3. நிலையான கட்டம்
4. சுருங்கும் கட்டம்

(……..)

45. குடித்தொகையின் சேர்க்கையாக அமையக்கூடிய விடயங்கள்
1. இனம், வர்க்கம், தேசியம், மதம், மொழி, பொருளாதாரம்
2. இனம், பால், தேசியம், மதம், மொழி, பொருளாதாரம்
3. இனம், வர்க்கம், வயது, மதம், மொழி, பொருளாதாரம்
4. இனம், வர்க்கம், பால், வயது, மதம், மொழி, பொருளாதாரம்

(……..)

46. குடித்தொகையுடன் இணைந்த பிரச்சினைகளாக கருதப்படாதது,
1. குடித்தொகயின் நகராக்க பிரச்சினை, எல்லைப் போர்கள், வர்க்க முரண்பாடு
2. குடித்தொகையின் வயது முதிர்வு, வேலையின்மை
3. குடித்தொகையில் ஊனமடைதல், இடப்பெயர்வு
4. குடித்தொகையின் பாலின சமூக ஏற்றத்தாழ்வு, அகதிகளாதல்
5. குடித்தொகையின் வறுமை, உணவின்மை

(……..)

47. அனைத்து மக்களுக்கும் அனைத்து காலங்களிலும் சாதகமான செயல்திறன் மிக்க உணவுகளை பெற்றுக்கொள்வது என்பது,
1. உணவின் கிடைப்புத் தன்மை
2. உணவு பாதுகாப்பு
3. உணவின் உறுதியின்மை
4. உணவு அணுகும் தன்மை

(……..)

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

48. தேரிய குடிப்பெயர்ச்சி என்பது,
1. குடி வரவு, குடியகழ்வு மூலம் மிகுதியாக அமைவது
2. குடி வரவு, குடியகழ்வு மூலம் சேர்க்கையாக அமைவது
3. குடி வரவு, குடியகழ்வு மூலம் அதிகமாக அமைவது
4. குடி வரவு, குடியகழ்வு மூலம் குறைவாக அமைவது

(……..)

49. பிரதேசமொன்றின் சனத்தொகையில் இயங்கும் தன்மை ரீதியாக மாற்றத்தை ஏற்படுத்தும் காரணியாக அமைவது,
1. பிறப்பு, இறப்பு, குடிப்பெயர்வு
2. குடித்தொகையின் பருமன் வளர்ச்சி
3. குடித்தொகயின் பரம்பல்
4. குடித்தொகையின் சேர்க்கை, கட்டமைப்பு

(……..)

50. உலக சனத்தொகையில் குறைவான இறப்பு, குறைவான பிறப்பு, அதிகளவிலான இறப்பு பிறப்பு என்பன நிகழும் நாட்டுத் தொகுதி முறையாக அமைவது
1. கட்டார், தென் கொரியா, தென்னாபிரிக்கா, நைகர்
2. தென் கொரியா, தென்னாபிரிக்கா, நைகர், கட்டார்
3. நைகர், கட்டார், தென் கொரியா, தென்னாபிரிக்கா
4. தென்னாபிரிக்கா, கட்டார், தென் கொரியா, நைகர்

(……..)

51. குடிப்பெயர்வில் செல்வாக்கு செலுத்தும் பிரதான காரணிகளின் தொகுதி,
1. தள்ளுவிசை, இழுவிசை
2. குடிவரவு, குடியகழ்வு
3. வதிவிட மாற்றம், தொழிவாய்ப்பு
4. அகதிகளாதல், கல்வி நடவடிக்கை

(……..)

52. குடியகழ்வினால் நாடுகளில் ஏற்படும் சாதக விளைவும், பாதக விளைவும் முறையே,
1. அந்நிய செலாவணி பெறுதல், மூளைசாலிகளின் வெளியேற்றம்
2. மூளைசாலிகளின் வெளியேற்றம், அந்நிய செலாவணி பெறுதல்
3. அந்நிய செலாவணி பெறுதல், மூளைசாலிகளின் உள்வருகை
4. தொழிற்தேர்ச்சி, தொழில் பகுப்பு

(……..)

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

53. இலங்கையின் சன அடர்த்தி கூடிய, குறைந்த மாவட்ட தொகுதி முறையே
    1. கொழும்பு, கம்பகா, களுத்துறை, முல்லைத்தீவு, மொனராகலை, மன்னார்
    2. கம்பகா கொழும்பு, களுத்துறை, முல்லைத்தீவு, மொனராகலை, மன்னார்
    3. கொழும்பு, களுத்துறை, கம்பகா, முல்லைத்தீவு, மொனராகலை, மன்னார்
    4. கொழும்பு, முல்லைத்தீவு, கம்பகா, களுத்துறை, மொனராகலை, மன்னார்

(……..)

54. இலங்கையின் 2012 ஆம் ஆண்டின்படி, இன ரீதியான சேர்க்கைகள் ஏறுவரிசையாக அமையும் சரியான விடை
    1. இந்திய தமிழ்ர் 5%, முஸ்லிம்கள் 9%, இல்கை தமிழர் 11%, சிங்களவர் 75%
    2. முஸ்லிம்கள் 5%, இந்திய தமிழர் 9%, இலங்கை தமிழர் 11%, சிங்களவர் 75%
    3. இந்திய தமிழர் 5%, இலங்கை தமிழர் 9%, முஸ்லிம்கள 11%, சிங்களவர் 75%
    4. சிங்களவர் 75%, இலங்கை தமிழர் 11%, முஸ்லிம்கள் 9%, இந்திய தமிழர் 5%

(……..)

55. இயற்கை அதிகரிப்பு வீதத்தை சரியாக காட்டும் சமன்பாடு
    1. $\frac{\text{பிறப்பு} - \text{இறப்பு}}{\text{நடு ஆண்டு சனத்தொகை}} \times 100$
    2. $\frac{\text{குடிவரவு} - \text{குடியகல்வு}}{\text{நடு ஆண்டு சனத்தொகை}} \times 100$
    3. $\frac{\text{இறப்பு} + \text{பிறப்பு}}{\text{நடு ஆண்டு சனத்தொகை}} \times 100$
    4. $\frac{\text{குடிவரவு} - \text{குடியகல்வு}}{\text{சனத்தொகை}} \times 100$

(……..)

56. இலங்கையில் இருந்து தொழில் செய்வதற்காக வெளிநாட்டில் வாழும் மொத்த சனத்தொகையில் 94% மானோர் பின்வரும் எவ்வயது பிரிவுக்குள் உள்ளடங்குவர்,
    1. 18 -59 வயது ஆண் பெண்
    2. 0 - 14 வயது ஆண் பெண்



மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

3. 15 - 60 வயது ஆண் பெண்
4. 21 - 49 வயது ஆண் பெண்

(……..)

57. உலக மக்களின் வறுமை கோட்டு எல்லையினை அளவிடும் IPLL 2015 ஆண்டின்படி,
   1. $1.90 நாளொன்றுக்கான வருமானம்
   2. $1.25 நாளொன்றுக்கான வருமானம்
   3. $1.09 நாளொன்றுக்கான வருமானம்
   4. $1.99 நாளொன்றுக்கான வருமானம்

(……..)

58. உலகின் இயற்கை அதிகரிப்பு கூடிய, குறைந்த நாட்டுத் தொகுதிகள் முறையே,
   1. லெபனான் 9.4%, சிம்பாபே 4.4%, பல்கேரியா -0.83%, டென்மார்க் 0.02%
   2. லெபனான் 9.4%, சிம்பாபே 4.4%, டென்மார்க் -0.83%, பல்கேரியா 0.02%
   3. சிம்பாபே 9.4%, லெபனான் 4.4%, பல்கேரியா -0.83%, டென்மார்க் 0.02மூ
   4. டென்மார்க் 9.4%, சிம்பாபே 4.4%, பல்கேரியா -0.83%, லெபனான் 0.02%

(……..)

59. இலங்கையில் பரம்பல் அடர்த்தியின் படி, மக்கள் தொகைக்கும் நிலப்பரப்பும் இடையிலான வித்தியாசம்,
   1. ஈரவலயம் 35 % நிலம் 65 % மக்கள், உலர்வலயம் 65% நிலம் 35 % மக்கள்,
   2. ஈரவலயம் 65 % நிலம் 35 % மக்கள், உலர்வலயம் 35% நிலம் 65 % மக்கள்,
   3. ஈரவலயம் 30 % நிலம் 65 % மக்கள், உலர்வலயம் 60 % நிலம் 35 % மக்கள்
   4. ஈரவலயம் 25 % நிலம் 75 % மக்கள், உலர்வலயம் 65 % நிலம் 35 % மக்கள் (……..)

60. தற்காலிகமாக, நிரந்தரமாக அமையும் குடியிருப்பின் கூறுகளின் சரியான அடிப்படை தெரிவு தொகுதி,
   1. மனிதன் - சமூகம் - சூழல் - வலையமைப்பு - பாதுகாப்பு
   2. குடி - சமூகம் - சூழல் - வலையமைப்பு - பாதுகாப்பு
   3. சாகியம் - சமூகம் - சூழல் - வலையமைப்பு - பாதுகாப்பு
   4. குடித்தொகை - சமூகம் - சூழல் - வலையமைப்பு - பாதுகாப்பு

(……..)

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

61. நாகரீக குடியிருப்புக்களை மெசபத்தேமியா, இந்து நதி, ரோம், மாயா ஆகிய இடங்களில் இருந்து நகரங்களின் தெரிவு முறையாக அமைவது,
   1. ஊர் - எரிது, மொகஞ்தாரோ - ஹரப்பா, எதன்ஸ் - ஸ்பாட்டா, நொஸெஸ் - மிக்ஸ்டெக்
   2. ஊர் - எரிது, மொகஞ்தாரோ - ஹரப்பா, எதன்ஸ் - மிக்ஸ்டெக், நொஸெஸ் - ஸ்பாட்டா
   3. ஊர் - எரிது, எதன்ஸ் - ஹரப்பா, மொகஞ்தாரோ - ஸ்பாட்டா, நொஸெஸ் - மிக்ஸ்டெக்
   4. ஊர் - ஹரப்பா , மொகஞ்தாரோ – எரிது, எதன்ஸ் - ஸ்பாட்டா, நொஸெஸ் - மிகஸ்டெக்

(……..)

62. குடியிருப்பின் விருத்தி போக்கில் சங்கிலி தொடர்பிலான வடிவ போக்கு
   1. பண்ணை – சிறுகிராமம் - கிராமம் - சிறுநகரம் - நகரம் - பெருநகரம் - நகரப்பகுதி - நகர சூழல்
   2. சிறுகிராமம் - பண்ணை - கிராமம் - சிறுநகரம் - நகரம் - பெருநகரம் - நகரப்பகுதி - நகர சூழல்
   3. பண்ணை – கிராமம் - சிறுகிராமம் - சிறுநகரம் - நகரம் - பெருநகரம் - நகரப்பகுதி - நகர சூழல்
   4. பண்ணை – சிறுகிராமம் - கிராமம் - சிறுநகரம் - பெருநகரம் - நகரம் - நகரப்பகுதி – நகர சூழல்

(……..)

63. ஆரம்ப பொருளாதார நடவடிக்கையில் அடங்கும் விடைத்தொகுதி,
   1. விவசாயம், மீன்பிடி, கால்நடை, வேட்டையாடல், காட்டு கைத்தொழில், சுரங்க கைத்தொழில்
   2. மோட்டார், கப்பல், இலத்திரனியல், காட்டு தொழில், சுரங்க கைத்தொழில்
   3. விவசாயம், மீன்பிடி, கால்நடை, வேட்டையாடல், மோட்டார், கப்பல், சுரங்க கைத்தொழில்
   4. விவசாயம், மீன்பிடி, இலத்திரனியல், வேட்டையாடல், காட்டு கைத்தொழில், சுரங்க கைத்தொழில்

(……..)

64. நகர் குடியிருப்பில் உள்ளடங்கும் பிரதான தொகுதிகள்,
   1. நகரம் - பெருநகரம், நகர் பகுதி - நகர் சூழல் - நகர் பிரதேசம்
   2. நகரம் - பெருநகரம், நகர் சூழல் - நகர் பகுதி - நகர் பிரதேசம்
   3. நகரம் - பெருநகரம், நகர் பகுதி - நகர் பிரதேசம் - நகர் சூழல்
   4. நகரம் - பெருநகரம், நகர் பிரதேசம் - நகர் பகுதி - நகர் சூழல்

(……..)

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

65. வசதி குறைந்த வீடுகள், சுகாதாரமற்ற வீடுகள், ஒழுங்கில்லாத வீதிகள், அதிக ஏழை மக்கள் வாழ்தல் என்பனவற்றின் வலயமாக கருதும் சேறிகள், சேறி தோட்டங்களுக்கு அழைக்கப்படும் சிறப்புப் பெயர்கள்

    1. டபெல் - ஜெர்மன், பராகா – ஜப்பான்
    2. பிரேசில் - அசெண்டே, இந்தியா – சேறி
    3. தாராவி - கல்கத்தா, பஸ்டி - மும்பாய்
    4. தாராவி - மும்பாய், பஸ்டி - கல்கத்தா

(……..)

66. முறையற்ற குடியிருப்புக்கு உதாரணமாக அமைவது,

    1. டபெல் - ஜெர்மன், பராகா – ஜப்பான்
    2. பிரேசில் - அசெண்டே, இந்தியா – சேரி
    3. தாராவி - கல்கத்தா், பஸ்டி - மும்பாய
    4. தாராவி - மும்பாய், பஸ்டி - கல்கத்தா

(……..)

67. ஏதாவது ஒரு பௌதீக, சமூக, பொருளாதார காரணிகள் தடையில்லாமல் அமையும் போதும், குறித்த இடத்தினை மையமாகக் கொண்டு உருவான குடியிருப்பு தொகுதி முறையே,

    1. சிதரல், கொத்தனி
    2. நேர்கோட்டு குடியிருப்பு, வரலாற்று குடியிருப்பு
    3. சிதரல் குடியிருப்பு, நாடா குடியிருப்பு
    4. சந்தி குடியிருப்பு, துறைமுக குடியிருப்பு

(……..)

68. சனத்தொகை இடைப்பட்டதும், சனப்பெயர்ச்சி அதிகம் உள்ளதும், முதல் நிலை பொருளாதார நடவடிக்கை வீழ்ச்சி பெற்று வருவதும், நிர்மாணிக்கப்பட்ட பகுதிகள் அதிகரித்த வரும் வகையில் அமையும் குடியிருப்பு,

    1. கிராமாந்தர குடியிருப்பு
    2. நகர குடியிருப்பு
    3. கிராம குடியிருப்பு
    4. நாடா குடியிருப்பு

(……..)

69. வரலாற்றுக்கு முட்பட்ட, முன் வராலாற்று காலத்தில் ஏறக்குறைய 125000 ஆண்டுகளிலிருந்து குடியிருப்பு உருவாகிய பகுதிகளாக அமைவது,

    1. புத்தல, பதிராஜவெல, வில்பத்து, மினிஹாகல்கந்த
    2. சேருவில, விலகெதர, புத்தல, மிகிந்தலை
    3. புத்தல, பதிராஜவெல, யால, மினிஹாகல்கந்த
    4. கண்டி, பதிராஜவெல, வில்பத்து, மினிஹாகல்கந்த

(……..)

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

70. உலர் வலய குடியிருப்புக்களின் சிறப்பான பிரிவுகள்,

1. குளம், நெல்வயல், வீடு, சேனைகள், காடுகள்
2. விகாரை, நெல்வயல், வீடு, சேனைகள், காடுகள்
3. ஆறு, நெல்வயல், வீடு, சேனைகள், காடுகள்
4. ஆறு, நெல்வயல், வீடு, சேனைகள், காடுகள்

(……..)

71. தோட்ட குடியிருப்புக்கள் அதிகம் உள்ள மாவட்டங்கள்,

1. நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி
2. கொழும்பு, கண்டி, காலி, நுவரெலிய, பதுளை
3. மொனராகலை, முல்லைத்தீவு, அம்பாறை, பதுளை
4. நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, கொழும்பு

(……..)

72. இலங்கையின் நகர பகுதிகள் என இனங்காண்பதற்கு நிர்வாக நியதிகளாக அமைவது,

1. நகர சபை, மாநகர சபை, சனத்தொகை அளவு
2. நகர சபை, கிராம சேவகர், சனத்தொகை அளவு
3. நகர சபை, பிரதேச சபை, சனத்தொகை அளவு
4. நகர சபை, மாகாண சபை, சனத்தொகை அளவு

(……..)

73. சனத்தொகை அடிப்படையில் இலங்கையின் நகர பகுதிகளின் பிரதான பிரிவுகளாவன,

1. பாரிய நகரம் 100000, மத்திய நகரம் 20000 - 100000, சிறிய நகரம் 20000க்கு குறைவு
2. பாரிய நகரம் 100000, மத்திய நகரம் 2000 – 100000, சிறிய நகரம் 20000க்கு குறைவு
3. பாரிய நகரம் 1000000, மத்திய நகரம் 2000 – 100000, சிறிய நகரம் 20000க்கு குறைவு
4. பாரிய நகரம் 10000, மத்திய நகரம் 2000 – 100000, சிறிய நகரம் 20000க்கு குறைவு

(……..)

74. இலங்கையின் நகர குடியிருப்பின் நவீன போக்குகள் அல்லாதது,

1. சம்பிரதாயமான கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்டு வளர்கிறது
2. கிராமத்திலிருந்து கிராமாந்தர நகரங்கள் அதிகரித்து வருதல்
3. கைத்தொழில். சேவைகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

4. வீடுகள் குத்தான வளர்ச்சியையும், உலகமயமாதல் கலாசாரத்திற்கு உட்படுதல்

(……..)

75. நகரமய சுட்டி என்பது,

1. ஒரு நாட்டின் குறித்த ஆண்டில் குறித்த நகர சனத்தொகையினை நடு ஆண்டு சனத்தொகையால் வகுத்து நூற்று வீதமாக கூறுவது.
2. ஒரு நாட்டின் குறித்த ஆண்டில் குறித்த சனத்தொகையினை ஆண்டு சனத்தொகையால் வகுத்து நூற்று வீதமாக கூறுவது
3. ஒரு நாட்டின் குறித்த ஆண்டில் குறித்த நகர சனத்தொகையினை ஆண்டு சனத்தொகையால் வகுத்து ஆயிரம் வீதமாக கூறுவது
4. ஒரு நாட்டின் குறித்த ஆண்டில் குறித்த சனத்தொகையினை நடு ஆண்டு சனத்தொகையால் வகுத்து ஆயிரம் வீதமாக கூறுவது

(……..)

76. உலகின் நகராக்க மட்டம் உயர்ந்த, குறைந்த நாட்டு தொகுதிகள் முறையே,

1. சிங்கப்பூர், மெகாவா, டிரின்டேட், புருண்டி
2. ஜப்பான், மெகாவா, டிரின்டேட், புருண்டி
3. அமெரிக்கா, மெகாவா, டிரின்டேட், புருண்டி
4. சீனா, மெகாவா, டிரின்டேட், புருண்டி

(……..)

77. 2050 இல் வலய ரீதியில் நகர மட்ட வளர்ச்சியின் சதவீத போக்கு முறையே,

1. தென் அமெரிக்கா 87%, லத்தீன் அமெரிக்கா 86%, ஐரோப்பா 82%, அவுஸ்திரேலியா 74%,
   ஆசியா 64%
2. லத்தீன் அமெரிக்கா 87%, தென் அமெரிக்கா 86%, ஐரோப்பா 82%, அவுஸ்திரேலியா 74%,
   ஆசியா 64%
3. தென் அமெரிக்கா 87%, ஐரோப்பா 86%, லத்தீன் அமெரிக்கா 82%, அவுஸ்திரேலியா 74%,
   ஆசியா 64%
4. தென் அமெரிக்கா 87%, லத்தீன் அமெரிக்கா 86%, அவுஸ்திரேலியா 82%, ஐரோப்பா 74%,
   ஆசியா 64%

(……..)

78. தற்கால நகரமயமாதலின் புதிய தொனிபொருளாக அமையும் புளு, கோல்டன், கிறீன் பனானா என அமையும் விடைத்தொகுதி,

1. வட மேற்கு இங்கிலாந்து - இத்தாலி ஜெனோவா, ஜெனிவா - வெலன்சியா, மத்திய ஐரோப்பா
2. வட கிழக்கு - இத்தாலி ஜெனோவா, ஜெனிவா - வெலன்சியா, மத்திய ஐரோப்பா

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

3. வட மத்திய - இத்தாலி ஜெனோவா, ஜெனிவா - வெலன்சியா, மத்திய ஐரோப்பா
4. தென் மேற்கு - இத்தாலி ஜெனோவா, ஜெனிவா - வெலன்சியா, மத்திய ஐரோப்பா

(……..)

79. நகராக்கத்தில் வாழும் நிரந்தர தொழில் இன்மையால் வாழும் மக்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் முறையற்ற தொழில் பிரிவுகளில் அடங்குவது,
   1. போதைப்பொருள் விற்பனை, பாலியல் தொழில், திருட்டு, சிறுவர் துஸ்பிரயோகம், சமூக விதோர குற்றச்செயல்
   2. மருந்துபொருள் விற்பனை, பாலியல் தொழில், திருட்டு, சிறுவர் துஸ்பிரயோகம், சமூக விதோர குற்றச்செயல்
   3. போதைப்பொருள் விற்பனை, பாலியல் தொழில், திருட்டு, சிறுவர் ஊக்குவிப்பு, சமூக விரோத குற்றச்செயல்
   4. போதைப்பொருள் விற்பனை, பாலியல் தொழில், திருட்டு, சிறுவர் துஸ்பிரயோகம், சமூக நலன் செயல்

(……..)

80. மணிலா, கம்பலா, மில்னா, கல்கத்தா, கொழும்பு ஆகிய வளரும் நாடுகளின் நகரங்களில் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சனையாக அமைவது,
   1. திண்மக்கழிவு, தொற்று நோய், சேறிப்பிரச்சினை
   2. திண்மக்கழிவு, சேறிப்பிரச்சினை, சுத்தமான நீர் இன்மை
   3. திண்மக்கழிவு, சேறிப்பிரச்சினை, தொழிநுட்பமின்மை
   4. முதலாவது சரி, இரண்டாம், மூன்றாவது ஓரளவு சரியாகும்

(……..)

81. இலங்கை மாவட்டங்களின் கொழும்பு மாவட்ட நகராக்க மட்டம் உயர் நிலையானது, இதன்படி சரியான சனத்தொகை அளவாக கணிப்பிடும் நகர சபைகள், மாநகர சபைகளின் பங்களிப்பு
   1. கொழும்பு 44%, கடுவல 20மூ, தெஹிவளை 15%, மொரட்டுவ 13%, ஜயவர்தனபுர கோட்டை 8%
   2. கொழும்பு 40%, கடுவல 24%, தெஹிவளை 15%, மொரட்டுவ 13%, ஜயவர்தனபுர கோட்டை 8%
   3. கொழும்பு 55%, கடுவல 10%, தெஹிவளை 15%, மொரட்டுவ 13%, ஜயவர்தனபுர கோட்டை 8%
   4. கொழும்பு 40%, கடுவல 20%, தெஹிவளை 15%, மொரட்டுவ 13%, ஜயவர்தனபுர கோட்டை 8%

(……..)

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

82. இலங்கையின் புதிய நகர அபிவிருத்தி கொள்கையாக அமைவது,

1. மேல்மாகாண பாரிய நகரமயமாக்கல் திட்டம்
2. மேல்மாகாண பாரிய துறைமுகமாக்கல் திட்டம்
3. மேல்மாகாண சிறிய நகரமயமாக்கல் திட்டம்
4. மேல்மாகாண சுற்றாடல் நகரமயமாக்கல் திட்டம்

(……..)

83. நகர மக்களின் பிரச்சினைக்கான பிரதான தீர்வுகளாக அமைவதில் பிரதானமாக அமையும் விடயங்கள்,

1. நகர உட்கட்டுமான வசதி, நகர மக்கள் வாழ்க்கை தர உயர்வு
2. நகர உட்கட்டுமான வசதி, நகர மக்கள் வாழ்க்கை தொழில்
3. நகர உட்கட்டுமான வசதி, நகர மக்கள் வாழ்க்கை கல்வி
4. நகர உட்கட்டுமான வசதி, நகர மக்கள் வருமானம்

(……..)

84. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், திருகோணமலை ஆகிய நகரங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் அபிவிருத்தி திட்டங்கள் முறையாக அமைவது,

1. மேல், தென், கிழக்கு, பாரிய நகர வேலைத்திட்டம்
2. கிழக்கு, தென், மேல், பாரிய நகர வேலைத்திட்டம்
3. தென், கிழக்கு, மேல், பாரிய நகர வேலைத்திட்டம்
4. வட தென், கிழக்கு, பாரிய நகர வேலைத்திட்டம

(……..)

85. இலங்கை நகராக்கத்தின் சமூக விரோத செயற்பாடுகள், கழிவகற்றுதல், சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு நகர சபை, மாநகர சபை அமைச்சர்கள் சேர்ந்து செய்யும் பிரதான வேலைதிட்டத்தில அடங்காத விடயம்,

1. திண்மக் கழிவுகளை கொண்டு தாழ் நிலங்களை நிரப்பாது விடுதல், விழிப்பூட்டம், இலவச வைத்திய சேவை, நோய் கட்டுப்பாடு, போதை தடுப்பு
2. தொற்றும், தொற்ற நோய்களை கட்டுப்படுத்தல், சுத்தமான நகர் நிர்மாணம்
3. சமூக விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தல், சிவில் அமைப்பு, ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபடல்
4. சமூக வீராத செயற்பாடுகளை கட்டுப்படுத்தல், விழிப்பூட்டம், ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபடல்

(…….)

86. உலக விவசாயத்தில் பயன்படுத்தப்படும் தொழிநுட்பங்களாக அமையும் விடயங்கள்,

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

1. பசுமை புரட்சி. மரபணு, சேதன விவசாயம்
2. உற்பத்தி விரிவாக்கம், சந்தைப்படுத்தல், பல்தேசிய கம்பனிகளின் ஈடுபாடு
3. கலப்பு விதையாக்கம், இரட்டை கலப்பு விதையாக்கம், விலைநிலம் விஸ்தரிப்பு
4. மண் முகாமைத்துவம், களைகளை இல்லாதொழித்தல், பீடைக்கட்டுப்பாடு

(……..)

87. சர்வதேச விவசாய ஆய்வு தொடர்பான ஆலோசனை சபை, றொக்பெலர் அமைப்பு என்பன தோற்றம் பெற்ற வருடங்கள் முறையே,

1. 1980, 1943
2. 1943, 1960
3. 1973, 1963
4. 1992,1972

(……..)

88. பசுமை புரட்சியின் இரு பிரதான துறைகளாக அமைவது,

1. வினைத்திறன் கொண்ட விதையாக்கம், புதிய விவசாய தொழிநுட்பம்
2. வினைத்திறனற்ற விதையாக்கம், புதிய விவசாய தொழிநுட்பம்
3. வினைத்திறன் கொண்ட விதையாக்கம், பழைய விவசாய தொழிநுட்பம்
4. வினைத்திறன் கொண்ட விதையாக்கம், சேதன விவசாய தொழிநுட்பம்

(……..)

89. விவசாய நடவடிக்கைகளுக்கு இயந்திரங்களை பயன்படுத்துவதனால் ஏற்படும் சாதக பாதகம் முறையே,

1. வேலையிலகு, காலம் சேமிப்பு, பாரிய சேவையை பெறுதல், உள்ளீடுகளின் விலை அதிகம், வேலையின்மை, சிறிய நிலத்தை பயன்படுத்த முடியாமை
2. வேலைகடினம், காலம் சேமிப்பு, பாரிய சேவையை பெறுதல், உள்ளீடுகளின் விலை அதிகம், வேலையின்மை, சிறிய நிலத்தை பயன்படுத்த முடியாமை
3. வேலையிலகு, காலம் விரயம், பாரிய சேவையை பெறுதல், உள்ளீடுகளின் விலை அதிகம், வேலையின்மை, சிறிய நிலத்தை பயன்படுத்த முடியாமை
4. வேலையிலகு, காலம் சேமிப்பு, பாரிய சேவையை பெறுதல், உள்ளீடுகளின் விலை குறைவு, வேலையின்மை, சிறிய நிலத்தை பயன்படுத்த முடியாமை

(……..)

மத்திய மாகாண கல்வி திணைக்களம்

90. பசுமை புரட்சியின் சுற்றாடல் தாக்கங்கள் அல்லாத விடயங்கள்,
1. சமூக அசைவாக்கத்தினை பலவீனப்படுத்தும் நிலைமை உருவாகும்
2. மறைந்துள்ள அறுவடை போக்கு
3. உயிர்பல்வகைமை இரசாயன பதார்த்தங்களால் பாதிப்பு
4. கனிய எண்ணெய், உரங்கள் இரசாயன வளங்களாக உள்ளமை

(…….)

91. 1973 – 1994 ஆண்டு காலப்பகுதியில் அறிமுகமான மரபணு தொழிநுட்பத்தின் பிரதான பிரிவுகளாக அமைவது,
1. விவசாயம், மருந்து பொருள், உயிரியல் உற்பத்தி
2. விவசாயம், மருந்து பொருள், சேதன உற்பத்தி
3. விவசாயம், மருந்து பொருள், அசேதன உற்பத்தி
4. கைத்தொழில், மருந்து பொருள், உயிரியல் உற்பத்தி

(…….)

92. மரபணு தொழிநுட்பத்தின் பிரதான பண்புகளாக அமையாத விடை,
1. சேதன பசளை, பயிர் மாற்றீடு, உயிரியல் ரீதியான கிருமி நாசினிகள் பயன்பாடு அதிகம்
2. நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட தாவர, விலங்கு உற்பத்தி
3. சூழலுக்கு ஏற்ப அதிக விளைச்சல் தரவல்ல தாவரங்கள் விருத்தி
4. இரசாயன பொருளினால் பாதிப்பு, வீண்விரயம் அடைதல் எனும் நிலைமையும் குறைதல்

(…….)

